செ.வெ.எண் : 35 / ஆகஸ்ட் நாள் : 18.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## நல்லிணக்க நாள் உறுதிமொழியினை அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் எடுத்துக் கொண்டனர்

மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (18.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் நல்லிணக்க நாள் உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

மறைந்த மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு.ராஜீவ்காந்தி அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20-ஆம் நாள் ஆண்டுதோறும் சமுதாய நல்லிணக்க தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் சமுதாய நல்லிணக்க நாள் உறுதிமொழியினை எடுத்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

அந்தவகையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்

"நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும், நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன். மேலும், எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் அரசியலமைப்பு சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்" என்ற சமுதாய நல்லிணக்க நாள் உறுதிமொழியினை அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.வ.முருகானந்தம், சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திரு.கோ.கணேசன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.என்.சுஜிபிரமிளா உள்பட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**